
ISSN : 2394-2428

# வெற்றிமுனை

நவம்பர் 2017 அறிவைத் தேடி அன்பு நிறைந்த ஒரு பயணம் மாத இதழ்

ரூ.30/-



## நெஞ்சில் நிறைந்தவர் நினைவில் வாழ்கிறார்

### திருக்குறள் செம்மல்

## ந.மணிமொழியனார்

# நெஞ்சில் நிறைந்தவர் நினைவில் வாழ்கிறார்

## திருக்குறள் செயல்பாட்டுத் திருத்தலம்
## மதுரை திருக்குறள் செம்மல்
## ந.மணிமொழியனார்



இயக்கம் என்ற சொல் ஒரு அமைப்பையோ, நிறுவனத்தையோ, இயந்திரத்தையோ அடையாளப் படுத்தி னாலும் அதை இயக்கும் ஆளுமைத் திறன் மிக்க மனிதனால் மட்டுமே உறுதியோடும், நிலைத்த புகழோடும் நிற்க முடியும்.

கட்டுரையாளர்
மதுரை மார்சல் முருகன்

தமிழகம் முழுவதும் இது போன்ற ஆளுமைத் திறம் கொண்ட கல்வியாளர்கள் நிறைந்திருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும் என்றாலும் கல்வி ஆளுமையாளர்கள் படைப்பிலக்கியங்கள்,

தொகுப்பிலக்கியங்கள், ஆய்வு இலக்கியங்கள், என்று சீர் செய்யப்பட்ட வழித்தடங் களில் மட்டுமே பயணம் செய்கிறார்கள்.

## அடிப்படை பொருளாதாரமும், தமிழ் இலக்கிய பாண்டித்தியமும்

மாறாக மன்னர் காலம் தொடங்கி இன்று வரை மனித சமுதாயம் கற்றுக் கொள்ளவும், வழிபடவும் காலத்தை வென்று நிற்கும் சாதனைகளை செய்தவர்கள் அடிப்படை பொருளாதார வளமும், வளமையும் கொண்டவர்கள்தான் அதிகம். சமூகத்திற்கு பயன் பாடு உடையவர்களாக உள்ளனர். தாம் செயல்படுத்த நினைக்கும் காரியங்களில் முழுமையான ஆய்ந்த அறிவும், புலமையும் மிகுந்த பாண்டித்தியமும் பெற்றவர் களாக இருந்தால் அவர்கள் எடுத்துக் கொண்ட துறைகளில் சரியான எல்லையை எட்டுகிறார்கள். மொழி உணர்வு, இலக்கிய ஆற்றல், நீதி நூல் மீது கொண்ட பற்று இவைகளின் மூலமாக தங்களது பொருளா தாரத்தை துணையாகக் கொடுத்து சேவைகளில் முன் நிற்கிறார் கள். சிறந்த சேவை தமிழ் தொண்டுகளில் ஒரு மாநகரத் திலேயே முதன்மையானவ ராக நின்றவர், வென்றவர் **மதுரை திருக்குறள் செம்மல் மணிமொழியன் ஆவார்.** இவருடைய வணிக நிறு வனம், திருக்குறள் செயல் திருத்தலமாக போற்றப் பட்டது.

## நூற்றாண்டு பாரம்பரியமும் கொடை உள்ளமும்

மதுரை மணிமொழியன் கல்லூரிக் காலங்களில் தமிழ் இலக்கிய ஆற்றல் பெற்றுத் திகழ்ந்தார். தொழில் அதிபராகியும் இலக்கியத் திற்கும் குறிப்பாக திருக்குறளை போற்றுவதிலும், பெரும் பொருட்செலவு செய்துள்ளார் என்பதை தமிழ் அறிஞர்கள் அறிவார்கள். இதற்குக் காரணம் இவரது தந்தை அடிப்படையில் ஆன்மீகம், கல்வி இலக்கிய சமூகப் பணி களில் எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கிறார். இவரது பாட்டனார் ஆசு கவியான வர் தனது கிராமத்திற்கு முன் னேற்றம் கல்வி சமூக ஒற்றுமை மனிதநேய கோட்பாடுகளுக்கு பாடுபட்டுள்ளார் என்ற செய்தி நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம், கொட்டகுடி ஒரு சிறிய கிராமம். அங்கே நூறு ஆண்டு பாரம்பரியமுள்ள திருக்கோவில் உத்தம பாண்டீஸ்வரர் விண்ணகப் பெருமாள் கோவில்களை பராமரித்து ஆன்மீகப் பணியாற்றி வந்துள்ளார். அக்கோவில் அவரது மகன் மணிமொழியனார் திருப் பணி செய்ய அவருடைய துணைவியார் கமலா மணிமொழியன் தனது சொந்த நகைகளை கொடுத்து இந்தத் திருக்கோவிலை புதிய ஆலயமாகக்கட்டி மாபெரும் குடமுழுக்கு விழாவை அவர்கள் குடும்பத் தினர் செய்துள்ளார்கள். இன்று இக்கோவில் அந்தப் பகுதி மக்களின் அருள் மிக்க ஆலயமாக மக்கள் கோயிலாக வழிபாட்டுத் திருத்தலம் ஆகியுள்ளது. இக்கிராமத்தின் தொடக்கப் பள்ளி உருவாக்கவும் இவரது தந்தையார் தனது சொந்த இடத்தை வழங்கி இந்தப் பகுதி மக்களின் பிள்ளைகளை கல்வி கற்க வாருங்கள் என்று இல்லம் தோறும் சென்று அழைத்து வந்து படிக்க வைத்தார் என்ற செய்தி, இன்றும் அந்தப் பகுதியில் கதை சொல்லித் தகவலாக பரிமாறப்படுகிறது.

மதுரையில் தொழிலதிபராக இருந்து மணிமொழியன் தமிழ் தொண்டாற்றி சிறந்து விளங்கியதுடன் இவர்களது நியூ காலேஜ் ஹவுஸ் வணிக நிறுவனம் தமிழ் சங்கப்பலகை என்ற பெயர் பெற்றது. குன்றக்குடி ஆதீனம் மகாசன்னிதானம் தொடங்கிய திருக்குறள் பேரவைக்கு பொதுச் செய லாளரானார். மத நல்லிணக் கிற்காக திருவருட் பேரவை யில் மகாசன்னிதானம் உடன் இருந்து பெரும் பணியாற்றி யுள்ளார்.

இவரது வாழ்க்கை திருக்குற ளின் செயல் விளக்கமாக இருந்தது. தினந்தோறும் அறிஞர்கள் கடும் கருத்துக் கருவூலமாக சத்சங்கமாக விளங்கியது. வாழும் கால மெல்லாம் தமிழ்த் தொண்டு திருக்குறள் தொண்டு என வாழ்ந்தவர். திருக்குறளை தேசிய நூலாக்க பல மாநாடு களை நடத்தியவர். இந்தியத் தலைவர்களிடமும், உலக நாடுகள் சென்ற போதெல் லாம் அவரது கவனத்திற்கும் கொண்டு சென்றவர்.

**நெஞ்சில் நிறைந்தவர் நினைவில் வாழ்கிறார்**

இந்த ஆண்டு அவரது முதலாவது நினைவு நாள் ஆண்டாகி விட்டது. அவரது பூத உடல் இங்கு இல்லை. அவரது செயல்கள் திருக் குறள் மற்றும் கல்விப்பணி மக்கள் நல்வாழ்வுப் பணி, அடுத்த தலைமுறை வழிபடும் அரிய காரியங்களை அவரது ஆன்மா செய்யத் தூண்டு கிறது. குடும்பத்தினர் செய்து வருகிறார்கள். அவரது துணைவியார் திருமதி. கமலா மணிமொழியன், திருமைந்தர்கள் கார்த்தி கேயன் மணிமொழியன், கல்யாணராஜன் மணி மொழியன், பெண் மக்கள் கவிதா ரங்கநாதன், டாக்டர் அனுராதா கணேசன், மருமகள்கள் அபிராமி கார்த்திகேயன், யோகலட்சுமி கல்யாணராஜன் ஆகியோர் மதுரையில் அவரது திருக் குறள் பணியை குடும்ப விழாவாகக் கருதி மாதம் தோறும் நடத்தி வருகிறார்கள். ஆண்டு விழாக்கள் நடத்த முடிவு செய்துள்ளார். அவர்களது மருமகன், டாக்டர் A.S.கணேசன், சேலம் விநாயகா மிஷன்ஸ், விம்ஸ் மருத்துவமனை பல்கலைக் கழக வேந்தராவார். அவர்கள் குடும்பத்தோடும் தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் தலைவராகவும் டாக்டர் A.S.கணேசன் அவர்கள் இருந்து திரு.மணிமொழியனார் பெருமைக்குப் பெருமை சேர்த்து, முழுமையான ஈடு பாட்டோடு செய்து வருகிறார். தொடக்கமாக கொட்டகுடி கிராமத்தில் இவருடைய நினைவு நாளான இந்த 11.12.2017 முதலாம் ஆண்டு நினைவாக மாபெரும் இலவச அறுவை சிகிச்சை பொது மருத்துவமுகாம் நடத்தி பெருமை சேர்த் துள்ளார்கள் என்ற செய்தி யெல்லாம் நம்மை வியக்க வைக்கிறது.

**“தமிழுக்கு தொண்டு செய்வோன். சாவதில்லை”** என்ற பாரதி வாக்கு திருக்குறள் செம்மல் மணிமொழி யனார் மூலம் உயிர் பெற்றுள்ளது.

ஒருமைக்கண் தான் கற்ற
கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து

என்ற குறள் ஏழு பிறப்பிற்கும் பாதுகாப்புத் தரும் என்பது போல் இவர்களது ஏழு

தலைமுறைக்கும் புண்ணியம் சேர்த்துள்ளது. கல்விக் கொடையால் என்பது உண்மை.

அரசியல் சார்பின்றி அரசுகளில் பதவிகள் இல்லாது தான் எடுத்துக் கொண்ட தமிழ்த் தொண்டிற்கும், சமுதாயப் பணிக்கும் திருக்குறள் பணிக்கும் தங்கள் சொந்த தொழில் வருமானத்தை வழங்கிய வள்ளல் ஆவார் மணிமொழியன்.

அஞ்சாமை ஈகை அறிவு
ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு

அரசனாக, அமைச்சனாக, முடிசூடிக் கொள்ளவில்லை. ஆனால் வாழ்வியல் மாமன்னராக வாழ்ந்தார் திருக்குறள் செம்மல் என்பது செப்பேட்டு உண்மையாகும்.

இதன் விளக்கமாக இந்த முதலாம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு மதுரையில் நடந்த போது தமிழ்நாடு அரசு வருவாய்த்துறை மற்றும் பேரிடர் துறை அமைச்சர் மாண்புமிகு R.V. உதயகுமார், மேனாள் தஞ்சை தமிழ் பல்கலைக்கழக துணை வேந்தர் ம.திருமலை, தொழிலதிபர் வெள்ளக் கோவில் T.R. குணசேகர், தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத் தலைவர் டாக்டர்.ஏ.எஸ்.கணேசன், செயலாளர் டாக்டர் ஜெயராமன் போன்ற பேராளர்களும் தமிழ்நாடு தழுவிய பேராசிரியர்கள் ரோட்டரி கழகத்தினர், தமிழாசிரியர்கள், தமிழ் இலக்கிய அமைப்புச் சார்ந்தவர்கள் கலந்து கொண்ட மாபெரும் நினைவு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. விழாவின் ஏற்பாடுகளை உலக திருக்குறள் பேரவை மதுரை மாவட்ட பொறுப்பாளர்கள் கவிஞர் கா.கருப்பையா, கவிஞர் மார்சல் முருகன், கவிபாரதி அசோக்ராஜ், நியூ காலேஜ் ஹவுஸ் அலுவலகப் பணியாளர்கள் வி.கே.கே.பிளே குரூப்ஸ் பள்ளி அலுவலர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக நடத்தினார்கள். இதன் மூலம் திருக்குறள் செம்மல் மணிமொழியாளர் பணி தொடர்கிறது என்பது மகிழ்வைத் தருகிறது. ☒